# 1

# தமிழ் மொழியின் சிறப்பு

1. **சொ**ல்லில் இனியதமிழ்ச் சீரைப் – புவி
எங்கும் வழங்குமதன் பேரை – மொழி
செழியப்பு கழ்விளைக்கும்
செம்மொழி யின்சிறப்பை
மானே சொல்லு வேனே.

2. கண்டவர் இல்லையதன் பிறப்பு – பார்
சொல்லுமே யதனுடைய சிறப்பு – கண்முன்
எங்கும்வ ழங்கிவரும்
மொழிகள னைத்தையுமே
வெல்லும் உடன் கொல்லும்.

3. கற்ற தமிழ்ப்புலவர் நூலால் – பல
வெற்றி வேந்தர்செங் கோலால் – அது
ஓங்கிவ ளர்ந்திருக்கும்
வளர்ச்சிய னைவரையும்
மயக்கும் உலகு வியக்கும்.

4. அதனைய ழிக்கவந்த பகையே – உடன்
மண்டியிட் டதுபல தொகையே – கை
தன்னாலே வெய்யவனை
மறைத்தழிக்க எண்ணுவது
ஆமோ விந்தை தாமோ.

5. சங்கத் தமிழ்ப்புலவர் கூட்டம் – அதைப்
புகழ்ந்து பாடுங்கொண் டாட்டம் – கேட்டுப்
பொங்கியெ ழுந்துவரும்
முகிலின்இ டிமுழக்கம்
அடங்கும் உடன் ஒடுங்கும்.

6. செந்தமிழ்ப் பகையனைத்தும் பொடியே – என்றும்
உயர்ந்து நிற்குமதன் கொடியே – சேரன்
செங்குட்டு வன்பொறித்த
இமயவிற் கொடிமேலே
பறக்கும் புகழ் சிறக்கும்.

7. தெள்ளுத மிழ்நூலின் பெருக்கம் – உலகின்
எந்தமொ ழியில்தான் இருக்கும் – என்று
உள்ளுகின்ற போதுமனம்
கடலலை போலெழுந்து
ஆர்க்கும் உடல் வேர்க்கும்.

8. மொழியில் இனிமைதமிழ் மொழியே – அதன்
இலக்கணம் காட்டும்தனி வழியே – குமரி
ஆழியாய் ஆர்ப்பரிக்கும்
மற்றொரு கால்பசிபிக்
கடலாம் கண்ணும் படலாம்.

9. இயலிசை நாடகமுக் கூறு – என்றும்
பெற்றத தனால்பெரும் பேறு – அதைப்
புயலது வந்துவன்று
கடல்கொண்டு சென்றாலுமே
அழிவோ இல்லை இழிவோ.

10. காப்பதுமு யர்விப்பதும் குறளே – அணி
செய்திடும் நூல்களின் திரளே – தொல்
காப்பியரும் ஏனைப்பு
லவருமே சொல்வாரதன்
சீரு உடன் பேரு.

11. தமிழர்க்கு என்றுந்தமிழ் கண்ணே – அதன்
புகழு யர்ந்துநிற்கும் விண்ணே – சீர்
வளத்தையெ டுத்துரைக்க
வார்த்தைகளும் வழக்கினிலே
உண்டோ? கற்கண்டோ?

12. வடவர்கள் நாளும்செய் திறத்தால் – தமிழ்
வாடா தேபுலவர் அறத்தால் – பல்
ஆயிரம் ஆண்டுகளாய்
ஆண்டுவரும் மொழியிது
வாகும் துயர் போகும்.

13. இலக்கண வரம்பிதற்கு உண்டு – இதை
அலைந்துகற் றாராவல் கொண்டு – பழம்
பெருமைபெற்ற தமிழ்மொழியை
சிறுமையாக்க எவர்தமக்கும்
ஆமோ? பணிந்து போமோ?

14. கற்றவர்க்கு நாளும்மனம் துள்ளும் – பார்
வெற்றிவேந்தர் காவலையும் கொள்ளும் – இதை
வெற்றிகொள்ள ஆற்றலுள்ள
வேற்றுமொழி இங்கெப்படி
வாழும் என்றும் தாழும்

2

# நமது கடமை

1. **மா**மன்னர் வளர்த்திட்ட மொழியே - எங்கள்
வாழ்வில் ஒளிதந்த விழியே - சென்று
எங்கும்உ லாவரும் கிளியே - வேற்று
மொழிமீதெழும்
ஆவலாம்வெறி
கொடுந்தீயென
சுடுமேயதை
கண்டில்லை யோயின்னும் தோழியே - இன்றேல்
நம்மைவந் தடைந்திடும் பழியே.

2. கன்னித் தமிழினைப் போற்றுவோம் - அதன்
பகைவரைக் கழுவினில் ஏற்றுவோம் - மேல்
நமதுயிர் அதுவென்றே சாற்றுவோம் - உடல்
பிடிசாம்பலே
உடனாயினும்
கடனாகவே
கொளக்காத்துமே
பிறமொழி ஆவலை மாற்றுவோம் - இன்றே
அன்னார் மனதினைத் தேற்றுவோம்.

3. வானில் உலாவரும் மதியே - என்றும்
பாடும் புலவர்க்குக் கதியே - வாரி
அள்ளக் குறையாத நிதியே - உந்தன்
புகழ்பாடிய
புலவோர்களின்
படையேமிகப்
பலவாகிடும்
என்றாலும் வருமிடர் விதியே - வெல்வோம்
அந்நிய மொழிசெயும் சதியே.

4. வடக்கிருந் துவந்த பகையே - உடன்
தடுத்தது புலவர் தொகையே - அன்றே
முடித்தாரே அவர்தம் கதையே - உந்தன்
எழிலாகிய
நடைமாட்சியை
சிதைப்போமென
வருவாரவர்
எண்ணத்தைப் பழிக்குமன் பதையே - அதை
எரித்திட மூட்டுவோம் சிதையே.

5. காலத்தால் அழியாத இளமை - உன்
கோலத்தை மெருகூட்டும் புதுமை - நா
சொல்வதற் கென்றுமே இனிமை - என்றும்
புகழ்மேவிட
சிறந்தாயென
எமதுள்ளமே
களிகொள்ளுமே
எந்நாளும் சொல்வோமுன் பெருமை - உன்னை
செம்மொழி என்றாரே அருமை.

6. செம்மொழி என்றேதோள் தட்டுவோம் - நாம்
வெற்றி முரசினைக் கொட்டுவோம் - தமிழ்ப்
பகைவர் பதறிட விரட்டுவோம் - நம்
உயிர்போயினும்
உயர்வாகிய
தனிச்செம்மொழி
புகழ்நாளுமே
காத்திடல் கடனென்று சாட்டுவோம் - வேற்று
மொழிப்ப கைபுறம் ஓட்டுவோம்.

7. தமிழரொன் றாயின்று கூடுவோம் - நிகர்
அமிழ்தாம் தமிழினை நாடுவோம் - அது
நிமிர்ந்திட நல்வழி தேடுவோம் - இன்று
பலவாகிய
பிரிவால்நிதம்
பகைத்தேவரும்
நிலைமாறியே
தமிழ்வாழ்க என்றேநாம் பாடுவோம் - இது
செம்மொழி யென்றெண்ணி ஆடுவோம்.

8. வேற்று மொழியாவல் தள்ளுவோம் - என்றும்
கற்றிடத் தமிழ்வழி கொள்ளுவோம் - தமிழ்ப்
பற்றினால் எகிறியே துள்ளுவோம் - தூய
மொழிநம்மொழி
எனவேபிற
மொழியில்உள
எழுத்தைப்புறம்
தள்ளியே தமிழ்ப்புகழ் அள்ளுவோம் - இதை
உள்ளத்தால் உயர்வென்றே உள்ளுவோம்.

9. ஈடேதும் தமிழுக்கு இல்லையே - பொடி
ஆக்குவோம் எதிர்ப்போரின் பல்லையே - அவர்
பாடு ஆகும்படு தொல்லையே - செம்
மொழியாகிய
தமிழுக்கெவர்
தரினும்படு
துயரேயெனில்
அதற்கும் உண்டேயொரு எல்லையே - நன்கு
காப்போம் புலவரின் சொல்லையே

10. பாடிடத் தேன்சுவை கிட்டுமே - பக்திப்
பாடலால் சுவர்க்கமே எட்டுமே - ஆழ்ந்து
தேடிடக் கருத்தாழம் முட்டுமே - நமது
சுவையேமிகும்
தமிழாம்மொழி
பழுதேதுமே
படுமேயெனில்
தட்டித் தொடைபடை விட்டுமே - விண்
முட்ட வெற்றிக்கொடி கட்டுமே.

❖❖❖

## 3

# திருவள்ளுவரும் திருக்குறளும்

1. **ந**ற்றமிழ்த்தாய் பெற்றெடுத்த தங்கம் - நனி
கற்றோருக் கறிவுச்சு ரங்கம் - வான்
புகழுடை வள்ளுவனார்
திருக்குறளே நம்மையென்றும்
காக்கும் மனநோய் போக்கும்.

2. முத்தமி ழைவளர்த்த கூடல் - அதில்
முழங்கும்த மிழ்ப்புலவர் பாடல் - திரு
வள்ளுவனார் திருக்குறளைக்
கண்டுடன் மண்டியிட்டு
வணங்கும் மேலென முழங்கும்.

3. பொற்றாம ரைக்குளத்தில் மிதக்கும் - சங்கப்
பலகைபு லவரையே சுமக்கும் - மற்ற
புலவர்க்கி டம்கொடா
தனைவரை யுமேபுறம்
தள்ளும் இவரைக் கொள்ளும்.

4. பொய்யில்பு லவரைக்கொண் டாடும் - கவிக்
கூட்டம் அவரின்புகழ் பாடும் - நிதம்
அன்னார்புகழ் பாடுவதைத்
தம்தொழிலாய்க் கொள்ளுவதை
மகிழும் மனமே நெகிழும்.

5. வள்ளுவர் புலவர்க்குத் தலைமை - புவி
புகழ்ந்திடும் அன்னாரது புலமை - மனம்
சோர்ந்துவரும் அனைவருக்கு
மேமருந்து பலவுமே
தருவார் இன்பம் அருள்வார்.

6. வள்ளுவ னாருடைய சிலையே - நிதம்
கழுவுமே குமரியின் அலையே - காணும்
மக்களின் உள்ளமெலாம்
கடலலையாய் ஆர்ப்பரித்துத்
துள்ளும் மகிழ்வு கொள்ளும்.

7. சென்னையி லேயவர்க்குக் கோட்டம் - அதைக்
கண்டுபோ டுவர்கொண் டாட்டம் - செழும்
கர்நாட காவில்சிலை
வள்ளுவனார்க் கென்றுதுள்ளும்
மனமே அனு தினமே.

8. வாழ்க்கைக்கு நல்லவழி காட்டும் - மன
மாசெல்லாம் நம்மைவிட்டு ஓட்டும் - தினம்
தடுமாறும் உள்ளத்திற்குத்
தக்கவழி காட்டும்திசை
காட்டி ஊக்கம் ஊட்டி.

9. தமிழர்க்கு ஒப்பில்லாத வேதம் - இதில்
நமக்கிங்கு ஏதுமில்லை பேதம் - காணும்
சமயங்களின் சாரமதை
எடுத்துச்சொல் லும்நல்ல
தொகுப்பு உண்டோ மறுப்பு.

5. வள்ளுவர் புலவர்க்குத் தலைமை - புவி
புகழ்ந்திடும் அன்னாரது புலமை - மனம்
சோர்ந்துவரும் அனைவருக்கு
மேமருந்து பலவுமே
தருவார் இன்பம் அருள்வார்.

6. வள்ளுவ னாருடைய சிலையே - நிதம்
கழுவுமே குமரியின் அலையே - காணும்
மக்களின் உள்ளமெலாம்
கடலலையாய் ஆர்ப்பரித்துத்
துள்ளும் மகிழ்வு கொள்ளும்.

7. சென்னையி லேயவர்க்குக் கோட்டம் - அதைக்
கண்டுபோ டுவர்கொண் டாட்டம் - செழும்
கர்நாட காவில்சிலை
வள்ளுவனார்க் கென்றுதுள்ளும்
மனமே அனு தினமே.

8. வாழ்க்கைக்கு நல்லவழி காட்டும் - மன
மாசெல்லாம் நம்மைவிட்டு ஓட்டும் - தினம்
தடுமாறும் உள்ளத்திற்குத்
தக்கவழி காட்டும்திசை
காட்டி ஊக்கம் ஊட்டி.

9. தமிழர்க்கு ஒப்பில்லாத வேதம் - இதில்
நமக்கிங்கு ஏதுமில்லை பேதம் - காணும்
சமயங்களின் சாரமதை
எடுத்துச்சொல் லும்நல்ல
தொகுப்பு உண்டோ மறுப்பு.

10. என்னயில்லை வள்ளுவரின் நூலில் - அவர்
சொல்லுவாரே எல்லாமுப் பாலில் - நாடும்
அத்தனையும் நாம்பெறலாம்
நித்தமுமே நலம்பெறலாம்
வாழ்வு இல்லை தாழ்வு.

11. சுத்தப்ப குத்தறிவு வாதி - சொல்வார்
கத்துகடல் சூழ்புவிக்கு நீதி - ஊழ்,
இறையென்று சொன்னாலுமே
உரைபொருள் அத்தனையும்
புரட்சி கொள்வோம் மருட்சி.

12. அறம்பொரு ளின்பமென்ப தோடு - நாம்
பெற்றிடலாம் ஒப்பில்லாத வீடு - அது
கற்றவரெந் நாளும்கூறும்
நூலின்பயன் என்றேதினம்
ஓது ஈடு ஏது?

13. நாட்டையா ளுமன்னனுக்கு ஆசான் - எதை
எடுத்துச்சொல் லவுமே கூசான் - பெரும்
அரசியலில் பேரறிஞர்
அனைவருமே இவர்க்குப்பின்
நிற்பார் சொல்லை ஏற்பார்.

14. தெள்ளுதமிழ்த் தாய்க்குமணி யாரம் - திருக்
குறளைப்போ லுண்டோவலங் காரம் - எழில்
அன்னைக்கிடு மணிகளிலே
அழகிதுவென் றாலதுவும்
மிகையோ? மனக் குறையோ?

15. இலக்கியவா னில்தோன்றும் கதிரோன் - பிற
புலவர்க்கு என்றுமவன் புதிரோன் - அவன்
குறளைமேற் கோளாள
எவருமே தம்நூலில்
தவறார் புகழ மறவார்.

❖❖❖

## வேறு

1. **வ**ள்ளுவ னார்தந்த நூலே - உயர்
வாகும் நமக்குமுப் பாலே - வாழ்க்கை
முறையாவுமே தெளிவாகவே
உறையும்படி இதயத்திலே
உரைக்கும் எத் தரைக்கும்.

2. முப்பா லேதமிழ் வேதம் - எழும்
எப்பா லுமிதன் நாதம் - எங்கும்
முழங்கும்இதன் கருத்தையுடன்
உலவும்மொழி அனைத்தும்தலை
வணங்கும் உடன் இணங்கும்

3. எம்மொழி யுமிதை ஏற்கும் - குறள்
முன்னா லெந்நூலுமே தோற்கும் - கற்ற
மனமேபிழை யெதுவும்நிதம்
செய்யாமலே அறநல்வழி
சொல்லும் பழி கொல்லும்.

4. வாழ்வுக்கு நல்வழி காட்டி - அது
வாழுதே புகழ்க்கொடி நாட்டி - விளங்கும்
மனைவாழறம் துறவோரறம்
எனச்சொல்கிற இருவேறறம்
விளக்கும் படி சிறக்கும்.

5. அறம்பொருள் இன்பத்தால் சிறக்கும் - நம்
வாழ்வின் சோர்வெல்லாம் பறக்கும் - குறள்
நெறியேநிதம் நமக்கேசிறப்
புடைநல்வழி இதுவென்றுடன்
சாற்றும் உலகு போற்றும்.

6. முக்காலம் திருக்குறள் வாழும் - இதைப்
புகழுமே உலகு ஏழும் - என்றும்
நிலமாள்பவர் தமக்குப்பல
அரிதாகிய வழிகள்தமைச்
சுட்டும் புகழ் கிட்டும்.

7. தீந்தமிழ்த் தாய்க்குத் திலகம் - பொது
மறையெனக் கொண்டாடும் உலகம் - இதில்
தீங்கானதும் வேண்டாததும்
தெளிவாகவே விளங்கும்படி
கூறும் சுவை ஏறும்.

8. பிறமொழி யில்மொழி பெயர்த்தார் - பொருள்
பிறழா தேபாடல் அமைத்தார் - பார்
புகழும்படி மகிழும்படி
மனமேமிக நெகழும்படி
புனைந்தார் மகிழ்வால் நனைந்தார்.

9. ஈடில்லா இன்பமுப் பாலே - உயர்
வாகிடும் இமயத்தின் மேலே - சொல்ல
இணையேதுமே இதன்மேலுள
திலதாகுமே இனிமேலினி
ஏது உண்டோ வாது.

10. வள்ளுவர் பாடிய பாட்டு - என்றும்
கள்ள மனத்தார்க்குப் பூட்டு - அவர்
உரைக்கும்மொழி விரைவாகவே
உளத்தில்பதிந் திடுமேபலன்
தருமே மதிப்பு வருமே

❖❖❖

# 4

## அண்ணனும் தம்பியும்

1. சேரன்செங் குட்டுவனின் தம்பி - அவன்
சென்றான்து றவிக்கோலம் நம்பி - நம்
நெஞ்சைக்கொள் ளைகொள்ளும்
சிலப்பதி காரமதைத்
தந்தான் புகழ் வென்றான்.

2. முத்தமிழ்மு ழுங்கும்நல் காப்பியம் - தமிழ்ப்
பண்பாடு விளக்கும்நல் ஓவியம் - தந்த
இளங்கோவ டிகள்தம்மைத்
தமிழ்கூறு நல்லுலகம்
நாடும் புகழ் பாடும்.

3. ஆட்சிசெய்யும் பொறுப்பைத் துறந்தார் - உடன்
ஆன்மீக உலகுக்குப் பறந்தார் - எனில்
யாவருமே போற்றும்படி
ஏற்றாரே சமயப்
பொதுமை என்னே புதுமை.

4. முத்தமிழ்தேர் வித்தகரும் போற்றப் - புகழ்ச்
சாத்தனார் சொல்லைநிறை வேற்றச் - சீர்
சிலப்பதி காரமதை
இளங்கோவடி களாக்கித்
தந்தார் நிலைத்து நின்றார்.

5. கனகவி சயர்முடி ஏற்றிக் - கல்லை
நீராட்ட கங்கைநீரை ஊற்றிச் - சேரன்
செங்குட்டு வன்கற்புக்
கரசிக்கொரு கற்சிலையை
வடித்தார் புகழ் படைத்தார்.

6. பன்னாட்டு மன்னவரும் களிக்கப் - பொன்
மணியோசை எங்கணுமே ஒலிக்க - நம்
பெண்ணரசி கண்ணகியின்
கோவிலுக்குக் குடமுழுக்கு
செய்தார் மலர் பெய்தார்.

7. மூன்றுஅ றத்தைநிலை நாட்ட - முடி
மூவேந்தர் புகழைப்பறை சாட்ட - இது
செந்தமிழ்த் தாயின்காலை
அணிசெய்யும் சிலம்பெனவே
படைத்தார் பாவைத் தொடுத்தார்.

8. ஐம்பெருங் காப்பியத்தில் ஒன்று - மனம்
நைந்துமே போகும்படி நன்று - பார்
மெச்சும்படி யேபுனைந்து
தந்தாரே சிலப்பதி
காரம் நல்ல சாரம்.

9. மக்களின் காப்பியமாய்த் தந்தார் - மனம்
சொக்கவே காவியமே புனைந்தார் - தமிழ்
சாலப்பு கழ்பெற்று
நற்றமிழர் தம்தலையே
நிமிர்ந்தார் மனம் மகிழ்ந்தார்.

## 5

# கண்ணகி

1. **மா**நாய்கன் பெற்ற மங்கை
புனித கங்கை - புகார்
நகரமே போற்றும்நல் நங்கை - நல்ல
கொடையேமிகு
மணவாளனை
மணந்தாளவள்
சோறுடை சோழநல் நாட்டில் - என்றும்
நின்றாளே நம்மனக் கூட்டில்.

2. மாதவி என்றொரு மாது
செய்தாளே சூது - கொண்டாள்
கோவலன் தனைதப் பாது - அந்தக்
கணிகையவள்
நடமேயிவள்
துணையைப்பறி
கொடுத்தே நின்றாள்தன் வீட்டில் - புகழே
கொண்டாளே புலவர்தம் ஏட்டில்.

3. கோவலன் தன்பிழை காணாள்
தன்நலன் பேணாள் - என்றுமே
கண்ணகி தன்மனம் கோணாள் - கணிகை
மலைபோலவே
குவிந்தேநிறை
யுடையாமிகு
செல்வமெல் லாம்பறித் திட்டாள் - செல்வி
என்றும்போ லவேயிருந் திட்டாள்.

4. வெறுங்கை யுடன்மனை புக்கான்
செல்வம் மிக்கான் - நாணி
தன்தலை நிமிர்ந்து நோக்கான் - கண்ணகி
கணிகைக்கினி
தரவேயிது
உளதேயென
சிலம்பைத்தந் தாள்முகம் மலர்ந்து - கோவலன்
பேசா திருந்தான்நா உலர்ந்து.

5. விற்கச்சென் றானவள் சிலம்பு
வந்ததே வம்பு - கொலை
உற்றானே என்ன பண்பு - நங்கை
வழக்கேசொல
சிலம்பேயிடை
மணியேவிழ
பழிகொண்ட தேபாண்டி நாடு - அன்றே
மதுரையா னதேமண் மேடு.

6. கண்ணகி என்றபெண் ணரசி
கற்புக் கரசி - தமிழ்
மாநிலமே போற்றும் மகராசி - சேர
அரசானவன்
மனத்தாவலில்
இறையாகினள்
வீரர்வாழ் சேரமான் மண்ணில் - வாழ்த்தி
வரவேற்றார் தேவரே விண்ணில்.

7. மூவேந்தர் நாட்டுக்கே உரியள்
பெண்களில் அரியள் - இவள்
தமிழர்கள் போற்றும் பெரியள் - என்றும்
நிலமாம்மகள்
அவள்சீரடி
அறிந்தாளிலள்
மனைவிட்டு என்றுமே ஏகாள் - துயர்
தனைப்போக்கத் தனியிலும் போகாள்.

8. மகிழ்வென்றும் கொண்டது இல்லை
காட்டாளவள் தொல்லை - கண்ணகி
மீறாளே கணவனின் சொல்லை - அவளின்
துயரென்றுமே
துறந்தேவிடும்
துணையானவன்
மனைதேடி வருவனென் றிருந்தாள் - என்றும்
மாதாபிதா முன்னால் வருந்தாள்

9. மாதர்கள் குலத்திற்கு அணியே
தமிழர்கள் மணியே - அவள்
மென்மேலும் அழகுசெய் பணியே - அவளால்
பெருமைவரும்
மகிழ்வேவரும்
உயர்வேவரும்
கற்புக்குச் சான்றுதான் அவளே - என்றும்
நற்றமி ழர்களின் மகளே.

❖❖❖

## 6

# மணிமேகலை

1. **எ**ன்றுமே வாழுகின்ற மேகலையின் சிறப்பு
இல்வாழ்வில் வெறுப்பு - புகல்வேன்
பொன்னாய் விளங்குமதன் சொல்பொருள் நயத்தால்
எல்லார்க்குமே விருப்பு.

2. கோவலன் கொலையுண்டு மதுரையில் இறக்கவே
மாதவியில்லறம் துறக்கவே - கண்மணி
மேகலை தாயுடன் உறுதிகொண் டாளன்றே
மனையறம் மறக்கவே.

3. சாத்தனார் எழுதிட்டார் மேகலையின் வரலாறு
மாடலன் சொன்னவாறு - இளங்கோ
காப்பியம் ஒட்டியே தொடர்ந்திட் டாரே
சான்றோர் ஏற்குமாறு.

4. தமிழன் னைக்கொரு மணியாரம் சூட்டினார்
புகழ்த்தேர் ஓட்டினார் - சாத்தனார்
தமிழாய்ப் புலவரும் போற்றியே ஏற்றிட
பாநலன் காட்டினார்.